## ஹோலிகிறாஸ் கல்லூரி
**(தன்னாட்சி)**

(Accredited with “A++ grade by NAAC - CGPA 3.53)

**நாகர்கோவில் - 629 004**

## தமிழ்த்துறை (சுயநிதி)

நடத்தும்

# கன்னியாகுமரி வினாஞ்சி ஆராச்சி வியாகுல மரியாள் அறக்கட்டளையின் 8ஆவது அனைத்துக் கல்லூரி திருக்குறள் போட்டி

# அறிவிப்பும் அழைப்பும்

**போட்டி நடைபெறும் நாள் : 21,03,2025**

**இடம் : வளனார் அரங்கம்**
**திருச்சிலுவை கல்லூரி**



**மதிப்பிற்குரிய முதல்வர் / துறைத்தலைவர் அவர்களுக்கு**

**வணக்கமும் வாழ்த்துகளும்.**

ஆண்டுதோறும் எம் கல்லூரியின் சுயநிதிப் பிரிவு தமிழ்நாட்டின் மாபெரும் அடையாளமாக விளங்கும் ஐயன் திருவள்ளுவன் தந்த குறட்பாக்கள் மாணாக்கரைப் பரவலாகச் சென்றடையும் வகையில் அனைத்துக் கல்லூரி மாணாக்கர்க்கான திருக்குறள் போட்டியை நடத்தி வருகின்றோம். இதற்குத் தென்தமிழகத்தின் கல்லூரிகள் தம் பங்களிப்பைத் தொடர்ந்து தந்து எம்மை ஊக்கப்படுத்தி வருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## போட்டியின் நோக்கங்கள்

1. **கற்கும் குறளை எந்நாளும் நினைவில் நிறுத்தல் / மேலும் மேலும் கற்கும் ஆவலை வளர்த்தல் / பிறரையும் கற்கத் தூண்டுதல்.**
2. **குறட்பாக்களைப் பொருளறிந்து கற்று, சிந்தையில் பதிவு செய்தல்.**
3. **வாழ்வின் எச்சூழலிலும் வழிகாட்டும் / தீர்வு தரும் வகையில் குறட்கருத்துகளைப் பதிவிறக்கம் செய்யும் பழக்கத்தை உருவாக்குதல்.**
4. **குறள் நெறி நின்று, தன்னை, சமூகத்தை, உலகைப் புரிந்து, செம்மாந்த வாழ்வை மேற்கொள்ள ஊக்குவித்தல்.**

## போட்டியின் பங்கேற்பாளர்கள்

இத்திருக்குறள் போட்டியில் அனைத்துத் துறையைச் சார்ந்த (பிரெஞ்ச் உட்பட) இளநிலை, முதுநிலை மாணாக்கர் அனைவரும் பங்கு பெறலாம். போட்டி பொதுவானது. ஒரு கல்லூரியிலிருந்து எத்தனை பேர் வேண்டுமானாலும் பங்கேற்கலாம்.



## போட்டிக்குக் கற்க வேண்டிய அதிகாரங்கள்

1. அறத்துப்பால் : **1 முதல் 7ஆம் அதிகாரம் வரை**
(கடவுள் வாழ்த்து முதல் மக்கட்பேறு வரை)

2. பொருட்பால் : **39 முதல் 52ஆம் அதிகாரம் வரை**
(இறைமாட்சி முதல் தெரிந்து வினையாடல் வரை)

3. இன்பத்துப்பால் : **109 முதல் 113 அதிகாரம் வரை**
(தகை அணங்கு உறுத்தல் முதல் காதல் சிறப்பு உரைத்தல் வரை)

## இருவேறு போட்டிகளும் பரிசுகளும்

**1. எழுத்துப் போட்டி**

**2. வாய்மொழிப் போட்டி**

எழுத்துப் போட்டியானது காலையில் நடைபெறும். அதில் 10 இடங்களைப் பெற்றவர்கள் வாய்மொழிப் போட்டிக்குத் தகுதி பெற்றவர்கள். வாய்மொழிப் போட்டி பிற்பகல் நடைபெறும். போட்டியில் பரிசு பெறும் மூன்று இடங்களுக்கான தகுதி எழுத்துத்தேர்வு மற்றும் வாய்மொழித்தேர்வின் கூட்டு மதிப்பெண்கள் அடிப்படையில் முடிவு செய்யப்படும். வாகை சூடியவர்களுக்குப் பரிசுத் தொகை, நினைவுப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## பரிசுகளின் விபரம்

முதல் பரிசு
1000/-

இரண்டாம் பரிசு
750/-

மூன்றாம் பரிசு
500/-

மேலும் 60% மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் (எழுத்துத் தேர்வில்) அனைவர்க்கும் **சான்றிதழ்கள்** வழங்கப்படும்.

# பெயர்ப் பதிவு செய்ய வேண்டிய கடைசி நாள்

**10.03.2025**

**பதிவுக் கட்டணம் : ரூ. 50**

**தமிழ்த்துறைத் தலைவர் கவனத்திற்கு:**

மார்ச் 2ஆம் வாரத்திற்குள் தங்கள் கல்லூரியிலிருந்து எத்தனை மாணாக்கர் பங்கு கொள்வர் என்ற பட்டியலை அவர்தம் முழுப்பெயர் (முன்னெழுத்துடன்), படிக்கும் ஆண்டு, துறை ஆகியவற்றுடன்) கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.


**முனைவர். சி. ஆன்சி மோள்**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி)
ஹோலிகிறாஸ் கல்லூரி
நாகர்கோவில் – 629 004


**வள்ளுவன் தந்த வாக்கு**
**வையத்தை வாழ்விக்கும் வாக்கு**

## ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் சி. ஆன்சி மோள்
முனைவர். ம. மேபல் எடல் குயின்
முனைவர் சா. டெய்சிபாய்
முனைவர். மா. ஜாஸ்மின் வினோஜா

**தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்**
9994831384, 9486472465

**நிதி நல்கை**
**முனைவர் வி. ஜெபமாலை ஆராச்சி**
**முனைவர் வி. ஹெர்மனா ஜில்ட் ஆராச்சி**
**திரு. ச. விஜயகுமார் ஆராச்சி**